**செய்தி வெளியீடு எண்: 201** **நாள்: 05.03.2019**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் 4.3.2019 அன்று தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 10 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாகம் மற்றும் கல்வியியல் கட்டடத்தை திறந்து வைத்தார்கள்.

வேளாண்மைக்கான ஆராய்ச்சியை ஊக்குவிக்கும் வகையிலும், அதிகரித்து வரும் வேளாண் கல்விக்கான தேவையைப் பூர்த்தி செய்யும் வகையிலும், கிராமப்புற இளைஞர்கள் மற்றும் விவசாயிகள் பயன்பெறும் வகையிலும், புதுக்கோட்டை மாவட்டம் குடுமியான்மலையில் வேளாண்மைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 7.8.2014 அன்று சட்டப்பேரவை விதி எண் 110–ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் அறிவித்தார்கள்.

அதன்படி, தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் கீழ் செயல்படும் புதுக்கோட்டை மாவட்டம், குடுமியான்மலையில் உள்ள வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 3544 சதுர மீட்டர் பரப்பளவில், 10 கோடியே 27 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள நிர்வாகம் மற்றும் கல்வியியல் கட்டடத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே. பழனிசாமி அவர்கள் திறந்து வைத்தார்கள்.

இப்புதிய நிர்வாகம் மற்றும் கல்வியியல் கட்டடம், நிர்வாக அலுவலகம், வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், வேளாண்மைக் கல்வித் துறைகள், குடிநீர் வசதி, கழிவறை, வாகனம் நிறுத்துமிடம் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு.இரா. துரைக்கண்ணு, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் கிரிஜா வைத்தியநாதன், இ.ஆ.ப., வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் வேளாண்மைத் துறை முதன்மைச் செயலாளர் திரு.ககன்தீப் சிங் பேடி, இ.ஆ.ப., தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் நீ. குமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**